Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லம்
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழக்கிழமை, நவம்பர் 03, 2022 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 112

## கனமழை பெய்தாலும் தமிழகம் முழுவதும் சீரான மின் வினியோகம்: அமைச்சர் செந்தில்பாலாஜி பேட்டி



சென்னை, நவம்பர் 03 2022: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் தமிழகம் முழுவதும் சீரான மின் வினியோகம் செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் செந்தில் பாலாஜி கூறினார்.

சென்னை கே.கே.நகர் துணை மின் நிலையத்தை மின்சாரத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி நேற்று நேரில் ஆய்வு செய்தார். அப்போது அவர், துணை மின் நிலையங்களில் மழைநீர் தேங்காதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். மழைநீர் தேங்கினாலும் மின் வினியோகம் பாதிக்காதவாறு உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று அதிகாரிகள், ஊழியர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர் அமைச்சர் செந்தில்பாலாஜி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 10 துணை மின் நிலையங்களில் உள்ள 16 மின் மாற்றிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன .

கடந்த ஆண்டு மழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் இப்போது அந்த இடத்திலிருந்து 1 மீட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. சீரான மின் வினியோகம் செய்வதற்காக 2 ஆயிரத்து 700 பில்லர் பாக்ஸ் தரையிலிருந்து 1 மீட்டர் அளவுக்கு உயர்த்தி சீரான மின் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

சென்னையை பொறுத்தவரை பகல் நேரங்களில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக 1,440 பேரும், இரவு நேரங்களில் 600 பேரும் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். சென்னையை பொறுத்துவரை 1,800 பீடர்கள் மொத்தம் இருக்கிறது. அதில் ஒன்று கூட மின்வினியோகம் நிறுத்திவைக்கப்படவில்லை. 100 சதவீதம் மின் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. எல்லா பகுதியிலும் மின் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த வடகிழக்கு பருவமழையில் ஏற்கனவே எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாக ஏறத்தாழ 18 ஆயிரத்து 380 மின்மாற்றிகள் கையிருப்பு உள்ளன. அதே போல 5 ஆயிரம் கி.மீ அளவுக்கு மின்கடத்திகள் கையிருப்பு உள்ளன.

1.5 லட்சம் மின்கம்பங்கள் உள்ளன. கூடுதலாக 50 ஆயிரம் மின்கம்பங்கள் வரவழைக்கப்பட்டு மொத்தம் 2 லட்சம் மின்கம்பங்கள் தயார் நிலையில் இருக்கிறது. எனவே, மின்வினியோகத்தை பொறுத்தவரைக்கும் தமிழகம் முழுவதும் சீரான மின் வினியோகம் வழங்கப்பட்டு வருகிறது.

சென்னையில் பெய்த மழையால் எந்தவித பாதிப்புகளும் இல்லாத அளவிற்கு சீரான மின் வினியோம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக முதலமைச்சரின் வழிக்காட்டுதலின்படி எடுத்த நடவடிக்கையின் காரணமாக தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 40 ஆயிரம் மின்கம்பங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

மின்கம்பிகளை பொறுத்தவரைக்கும் 1,800 கி.மீ அளவுக்கு புதிதாக மாற்றப்பட்டுள்ளன. முதலமைச்சர், இந்த வடகிழக்கு பருவமழை காலத்துக்கு முன்பு ஆய்வு கூட்டங்களை நடத்தி ஒவ்வொரு துறைகளில் என்னென நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். அதன்படி, நடவடிக்கைகள் மேற்கொண்டதால் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

தமிழ்நாடு முழுவதும் மின்சார வாரிய பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைவர் ராஜேஷ் லக்கானி, இயக்குனர் (பகிர்மானம்) மா.சிவலிங்கராஜன், விருகம்பாக்கம் தொகுதி எம்.எல்.ஏ. பிரபாகர் ராஜா மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

## வடகிழக்கு பருவ மழை தீவிரம்: செம்பரம்பாக்கம், புழல் ஏரிகளிலிருந்து தண்ணீர் திறப்பு



சென்னை, நவம்பர் 03 2022: வடகிழக்கு பருவ மழையினால் திருவள்ளூர் மாவட்டம் புழல் ஏரிக்கு நீர் வரத்து தொடர்ச்சியாக உயர்ந்து வருவதைத் தொடர்ந்து 100 கன அடி உபரி நீர் திறக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது. வட இலங்கை கடற்கரையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக மழை பெய்து வருகிறது. இது வரும் நாட்களில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும் என தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில் சென்னை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக நீர் பிடிப்பு பகுதிகளான செம்பரம்பாக்கம், புழல் உள்ளிட்ட ஏரிகள் நிரம்பி வருகின்றன. செங்குன்றத்தில் மிக கனமழையாக 13 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கிய நிலையில் காஞ்சீபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட 3 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு அலார்ட் எச்சரிக்கையானது சென்னை வானிலை ஆய்வு மையம் தரப்பில் விடுக்கப்பட்டு இருக்கிறது. விடிய விடிய கொட்டித்தீர்த்த கனமழையால் பல பகுதிகள் வெள்ளக்காடாக மாறியுள்ளன. சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கடலூர், அரியலூர், தஞ்சை, விருதுநகர், ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அடுத்த 3 மணி நேரத்திற்கு மிதமான மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழையின் காரணமாக சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழல் ஏரிக்கு நீர்வரத்து கணிசமாக உயர்ந்துள்ளது. இதே போல செம்பரம்பாக்கம் ஏரியும் நீரின் வரத்தும் அதிகரித்துள்ளது. இதையடுத்து ஏரிகளை பொதுப்பணித்துறையினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். காஞ்சிபுரத்தில் உள்ள 381 ஏரிகளில் 24 ஏரிகளில் 100% நிரம்பி உள்ளன.

திருவள்ளூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக ஆவடியில் 16.7 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. மாவட்டம் முழுவதும் பரவலாக கனமழை பெய்துள்ளது. பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. பிரதான ஏரியான புழல் ஏரிக்கு விநாடிக்கு 2000 கனஅடி நீர் வந்து கொண்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டம் பூண்டி அணைக்கு நீர் பிடிப்பு பகுதிகளில் 5.5 சென்டிமீட்டர் அளவிற்கு மழை பெய்ததால் வினாடிக்கு 280 கன அடியாக நீர்வரத்து உள்ளது.

முழு கொள்ளளவை எட்டிய புழல் ஏரி

சென்னையின் குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், புழல் ஏரியானது 20.86 சதுர கி.மீ பரப்பளவில் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் அமைந்துள்ளது. ஏரியின் நீர்மட்ட மொத்த உயரம் 21.20 அடியாகும். இதன் முழு கொள்ளளவு 3300 மில்லியன் கன அடியாகும். இன்று காலை 6 மணி நிலவரப்படி நீர் இருப்பு 18.42 அடியாகவும் கொள்ளளவு 2692 மில்லியன் கன அடியாகவும் உள்ளது. புழல் ஏரியின் நீர்வரத்து காலை 6 நிலவரப்படி 1997 கன அடியாக உள்ளது. தற்போது வடகிழக்கு பருவ மழையினால் நீர்வரத்து தொடர்ச்சியாக உயர்வதால் புழல் ஏரியின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. ஏரியின் நீர்மட்ட உயரம் 18.42 அடியாக உள்ளது. புழல் ஏரிக்கு வடகிழக்கு பருவ மழையினால் நீர் வரத்து தொடர்ச்சியாக உயர்ந்து வருவதை தொடர்ந்து ஏரியிலிரந்து 100 கன அடி உபரி நீர் திறக்கப்பட்டது.

சென்னை, திருவள்ளூரில் விடாமல் பெய்து வரும் மழையால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. உடனுக்குடன் தண்ணீர் வெளியேற்றப்பட்டாலும் பல பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளதால் மக்கள் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். உபரி நீர் திறப்பு அதிகரிக்கும் பட்சத்தில் ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்களுக்கு உடனடியாக பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

கலெக்டர் எச்சரிக்கை

இந்நிலையில் திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:

அணையின் வெள்ள நீர் வழிகாட்டுதலின்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏரிக்கு வரும் உபரிநீரை அணையின் பாதுகாப்பு கருதி ஏரியிலிருந்து விநாடிக்கு 100 கனஅடி உபரி நீர் திறந்து விடப்படுகிறது. ஏரிக்கு வரக்கூடிய நீர்வரத்து தொடர்ந்து அதிகபடியாகும் நிலையில் கூடுதல் உபரிநீர் படிப்படியாக திறக்கப்படும் என முதற்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படுகிறது.

எனவே, புழல் ஏரியின் மிகைநீர் வெளியேறும் வாய்க்கால் செல்லும் கிராமங்களான நாரவாரிக்குப்பம், வடகரை, கிராண்ட்லைன், புழல், வடபெரும்பாக்கம், மஞ்சம்பாக்கம், கொசப்பூர், மணலி மற்றும் சடையான்குப்பம் ஆகிய பகுதிகளில் கால்வாயின் இருபுறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. மேலும் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை உடனடியாக வெளியேற்ற சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கலெக்டர் கூறியுள்ளார்.

செம்பரம்பாக்கம் ஏரி திறப்பு

இந்நிலையில் தொடர் மழை காரணமாக செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து கொண்டிருக்கிறது. செம்பரம்பாக்கம் ஏரி பகுதியில் இன்று நல்ல மழை பெய்யக்கூடும் என்று அறிவிப்பு வெளியாகியுள்ளதால் ஏரிக்கு வரும் நீரின் அளவு மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. செம்பரம்பாக்கம் ஏரியின் முழு கொள்ளளவான 24 அடியில் தற்பொழுது 20.64 அடியில் நீர் உள்ளது. தற்போது 1ஆயிரத்து 180 மில்லியன் கன அடி நீர் வரத்து உள்ளதாலும் , ஒரே நாளில் 89 மில்லியன் கன அடி நீரானது உயர்ந்துள்ளதாலும் ஏரியில் இருந்து இன்று பிற்பகல் 100 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது.

புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவதால் அடையாறு ஆற்றங்கரையோரம் உள்ள மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ரெயிலில் நாய், பூனைகளை கொண்டு செல்லும் வசதி: தெற்கு ரெயில்வே ஏற்பாடு



சென்னை, நவம்பர் 03 2022: ரெயில்வேயில் உள்ள வசதிகள், ரெயில்கள் இயக்கம், அதில் உள்ள தொழில்நுட்பம், பாதுகாப்பு தொடர்பாக பயணிகளிடம் விளக்கும் வகையில் 'உங்கள் ரெயில்வே பற்றி தெரிந்து கொள்ளுங்கள்' என்ற தலைப்பில் தெற்கு ரெயில்வே தகவல்களை வெளியிட்டு வருகிறது.

இந்த நிலையில் நாய், பூனை உள்ளிட்ட செல்லப் பிராணிகள், விலங்குகள், பறவைகளை ரெயிலில் கொண்டு செல்வதற்காக உள்ள வசதிகள் குறித்து தெற்கு ரெயில்வே விளக்கம் அளித்துள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

யானை, குதிரை, கழுதை, செம்மறி ஆடு, நாய் உள்ளிட்ட பிற விலங்குகள் மற்றும் பறவைகள் போன்றவற்றை ரெயில்களில் ஏற்றிச் செல்லலாம். அவற்றை ஏற்றிச்செல்வதற்கான விவரங்களை ரெயில் நிலையங்களில் பெறலாம்.

மற்ற விலங்குகளை விட வீடுகளில் செல்லமாக வளர்க்கப்படும் நாய், பூனை போன்றவற்றை பயணிகள் ரெயில்களில் தங்களுடன் அழைத்துச்செல்ல விரும்புகிறார்கள். செல்லப் பிராணியான நாய்களை முதல் ஏசி வகுப்பிலும், ரெயில் மேலாளரின் மேற்பார்வையின் கீழ் லக்கேஜ் மற்றும் பிரேக் வேனில் எடுத்துச் செல்லவும் பதிவு செய்யலாம்.

பயணிகள் தாங்கள் பயணிக்கும் பெட்டியில் நாயை அழைத்துச் செல்ல ஏசி முதல் வகுப்பு, கூபே தங்குமிடத்தை பிரத்தியேகமாக முன்பதிவு செய்ய வேண்டும். பயணியின் ஒரு டிக்கெட்டில் ஒரு நாய் மட்டுமே அனுமதிக்கப்படும். இதற்காக கட்டணமும் வசூலிக்கப்படும்.

6 மடங்கு அபராதம்

ரெயில் புறப்படுவதற்கு 3 மணிநேரத்துக்கு முன்பு நாயை லக்கேஜ் அல்லது பார்சல் அலுவலகத்துக்கு அழைத்து வர வேண்டும். பொது பயணிகள் பெட்டிகளில் நாயை கொண்டு செல்ல அனுமதி இல்லை. முறையாக முன்பதிவு செய்யாமல் நாய்களை ஏற்றிச்சென்றால் 6 மடங்கு லக்கேஜ் கட்டணம் விதிக்கப்படும்.

எந்த தொற்று நோய்களாலும் நாய் பாதிக்கப்படவில்லை என்று கால்நடை மருத்துவரிடம் பயணத்திற்கு 24 மணி முதல் 48 மணி நேரத்திற்கு முன்பு சான்றிதழ் பெற வேண்டும். முன்பதிவு செய்யும் போது தடுப்பூசி அட்டைகளை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

நாய்களை பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கான முழு பொறுப்பும் பயணிகளுடையது. நாய்க்கு தண்ணீர் மற்றும் உணவுக்கான ஏற்பாடுகளை உரிமையாளர்தான் செய்ய வேண்டும்.

அனைத்து ரெயில் பெட்டிகளிலும் நாய்களை கூடைகளில் எடுத்து செல்லலாம். அதற்காக பயணிகள், உறுதி செய்யப்பட்ட டிக்கெட் மற்றும் சரியான அடையாள சான்று வைத்திருக்க வேண்டும்.

நாயை ஏற்றி பெட்டிக்குள் அடைக்கும் முன்பு அதன் உரிமையாளர் நாயை வாய் காப்புடன் சரியாக சங்கிலியால் பிணைத்திருப்பதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# அமர் கௌஷிக் இயக்கும் 'பெடியா' திரைப்படத்தில் தனது புதுமையான கதாபாத்திரம் குறித்தும், கற்றுக்கொண்ட விஷயங்கள் குறித்தும் மனம் திறக்கும் வருண் தவான்

சென்னை, நவம்பர் 03 2022: வருண் தவான் நடிப்பில் வெளியாகும் திரைப்படங்கள் வணிக ரீதியான வெற்றி மற்றும் விமர்சகர்களின் பாராட்டு ஆகிய இரண்டையும் பெற்று வரும் நிலையில், சவால் மிக்க வேடங்களில் அவர் தொடர்ந்து நடித்து வருகிறார். புதுமையான கதைக்களத்துடன் கூடிய பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த திறப்படங்கள் மீதான அவரது தொடர் ஆர்வத்தை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது மேடாக் பிலிம்ஸ் தயாரிப்பில் ஜியோ ஸ்டூடியோஸ் மற்றும் தினேஷ் விஜன் வழங்கும், அமர் கௌஷிக் இயக்கும் 'பெடியா' திரைப்படத்தின் டிரெயிலர். பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ள இந்த டிரெய்லரின் முக்கிய அம்சங்களாக நகைச்சுவை மற்றும் பிரமாண்ட வி எஃப் எக்ஸ் காட்சிகள் உள்ள நிலையில், அவற்றை மிஞ்சும் வகையில் அமைந்து அனைவரின் பேசுபொருளாக ஆகியிருப்பது வருண் தவானின் தோற்றம் மற்றும் நடிப்பு என்றால் அது மிகையாகாது. மனிதனாகவும் மிருகமாகவும் அவர் தோன்றும் காட்சிகளில் அவரது உழைப்பும் ஈடுபாடும் மிளிர்கின்றன. ப்ரோமோக்களில் எந்தளவு



வருண் வித்தியாசமாகத் தெரிகிறார் என்பது குறித்து இணையத்தில் கருத்துகள் குவிந்து வருகின்றன, ஒநாயாக மாறும் ஒரு மனிதனின் கதாபாத்திரத்திற்குள் நுழைவதற்கு கடுமையான ஆயத்த பணிகளை அவர் மேற்கொண்டார் என்று படக்குழுவினர் தெரிவிக்கின்றனர். இப்பயணம் குறித்த தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட வருண், "ஒரு வரி கதைக்கருவைக் கேட்டு பெடியாவில் நடிக்க ஒப்புக்கொண்டேன். அன்றிலிருந்து இந்த படத்துடன் நான் ஒன்றி விட்டேன், தயாரிப்பாளர் மற்றும் இயக்குநரின் தொடர் ஆதரவுக்கு நன்றி. நான் நடித்ததிலேயே மிக சவாலான கதாபாத்திரம் இது. கிரியேச்சர் காமெடி எனப்படும் இயற்கை படைப்பு சார்ந்த நகைச்சுவை திரைப்படப் பிரிவில் இது எனது முதல் பயணமாக இருந்தாலும், இயக்குநர் அமர் எனக்கு மிகவும் கைகொடுத்தார். ஒரு நடிகனாக பலவிதமான பாத்திரங்கள் மூலம் ரசிகர்களை மகிழ்விக்க வேண்டும் என்பதே எனது மிகப்பெரிய கனவு. அந்த முயற்சியில் பெடியா மிக முக்கியமான முன்னேற்றம் ஆகும்", என்றார். 'பெடியா' டிரெய்லர் மூலம் வெளிப்படும் இதுவரை கண்டிராத கதை, சிறப்பான நகைச்சுவை மற்றும் பிரமாண்ட காட்சிகளுக்காக ஊடகங்களும் ரசிகர்களும் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர். தனது கதாபாத்திரத்தின் மீதான முழுமையான அர்ப்பணிப்புடன், வருண் தன்னை வெளிப்படுத்தி உள்ள விதம் பெரிதும் பேசப்படுகிறது. இப்படம் பெறப்போகும் மாபெரும் வெற்றிக்கான அடையாளங்களாக இவை அனைத்தும் அமைந்துள்ளன. ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் தினேஷ் விஜன் வழங்கும், மேடாக் பிலிம்ஸ் தயாரிப்பில், வருண் தவான், கீர்த்தி சனோான், தீபக் தோப்ரியால் மற்றும் அபிஷேக் பேனர்ஜீ நடித்துள்ள 'பெடியா' நவம்பர் 25 அன்று தமிழ், ஹிந்தி மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் பான்-இந்தியா படமாக 2டி மற்றும் 3டியில் வெளியாகவுள்ளது.

# மேட்டூர் அணையின் நீர்மட்டம் 23 வது நாளாக 120 அடியில் நீடிப்பு

சென்னை, நவம்பர் 03 2022: மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு 3 வது நாளாக வினாடிக்கு 26,000 கன அடியாக உள்ள நிலையில், அணையின் நீர்மட்டம் 23 வது நாளாக 120 அடியாக நீடிக்கிறது.

காவிரியின் நீர் பிடிப்புப் பகுதிகளில் லேசான மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு 1 ந்தேதி மாலை முதல் வினாடிக்கு 21,500 கன அடியிலிருந்து வினாடிக்கு 26,000 கன அடியாக அதிகரித்தது.



இன்று காலை மூன்றாவது நாளாக நீர்வரத்து வினாடிக்கு 26,000 கன அடியாக நீடிக்கிறது.

23 வது நாளாக நீர்மட்டம் 120 அடி

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 21,500 கன அடி வீதமும், வெள்ள நீர் வினாடிக்கு 4,500 கன அடி வீதம் உபரிநீர் போக்கி வழியாகவும் திறக்கப்பட்டு வருகிறது. கிழக்கு-மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 750 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இன்று காலை 23 ஆவது நாளாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து 120 அடியாக நீடித்து வருகிறது. அணையின் நீர் இருப்பு 93.47 டி.எம்.சியாக உள்ளது.

# சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அலுவலகத்தில் "தேசிய ஒற்றுமை நாள்" மற்றும் ஊழலை ஒழிப்பு நேர்மை உறுதிமொழி ஏற்கப்பட்டது.



சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சங்கர் ஜிவால்,உத்தரவின்பேரில், வேப்பேரி, காவல் ஆணையரகத்தில் மத்தியகுற்றப்பிரிவு கூடுதல் ஆணையாளர் சி.மகேஷ்வரி, தலைமையில், மத்தியகுற்றப்பிரிவு துணை ஆணையாளர்கள், ஜி.நாகஜோதி, கே.மீனா, ஜி.ஸ்டாலின், துணை ஆணையாளர்கள் எஸ்.ஆர்.செந்தில்குமார் (தலைமையிடம்), திரு.ராமமூர்த்தி (நிர்வாகம்) நுண்ணறிவுப்பிரிவு துணை ஆணையாளர்கள் எஸ்.அரவிந்த், எஸ்.சக்திவேல், காவல் அதிகாரிகள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் தேசிய ஒற்றுமை நாள் மற்றும் ஊழல் ஒழிப்பு நேர்மை உறுதிமொழியை" எடுத்துக்கொண்டனர்.

# சனோஃபியின் ஆதரவுடன் சி ஈ ஆர் டி ஏற்பாடு செய்த நிகழ்வில், காரண தூதர் கார்த்தி சிவகுமார், சர்வதேச கௌசர் தினத்திற்கான விழிப்புணர்வை ஆதரிக்கிறார்

சென்னை, நவம்பர் 03 2022: அரிய நோய்களின் ஒரு பிரிவான லைசோசோமால் ஸ்டோரேஜ் டிஸார்டர்ஸ் (எல் எஸ் டி) இன் நீண்டகால காரண தூதர் திரு. கார்த்தி சிவகுமார், நவம்பர் 1 ஆம் தேதி, கரு பராமரிப்பு ஆராய்ச்சி அறக்கட்டளை (ஃபெடல் கேர் ரிசர்ச் ஃபவுண்டேஷன்) மற்றும் சனோஃபி ஆகியவற்றின் பிரிவான, அரிதான கோளாறுகளுக்கான சிறப்பு மையம் (சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் ஃபார் ரேர் டிசார்டர்ஸ்) ஏற்பாடு செய்த, சென்னை விஎச்எஸ்ஸில் நடந்த சர்வதேச கவுச்சர் தின நிகழ்வில் கலந்து கொண்டார்.

பிரபல திரைப்பட நடிகரான கார்த்தி சிவக்குமார், 2011 ஆம் ஆண்டு முதல் எல் எஸ் டி நோயாளிகளின் நலனுக்காகப் போராடி வருகிறார், மேலும் முக்கிய பொது மேடைகளில் நோயாளிகளின் அவல நிலையை அடிக்கடி எடுத்துரைப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அனுதாபம் காட்டுகிறார்.

அரிதான நோய்களின் இந்த துறை, சிக்கலானது மற்றும் பன்முகத்தன்மை கொண்டது மேலும் நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சைக்கு ஒரு நிலையான ஆதரவு வழிமுறை தேவைப்படுகிறது. இத்தகைய நோய்கள் தீவிரமானவை, நாள்பட்டவை, பலவீனப்படுத்துபவை மற்றும் ஆபத்தானவை, மேலும் நீண்ட கால, சிறப்பு சிகிச்சைகள்/மேலாண்மை தேவைப்படுபவை மற்றும்




சில சமயங்களில் கடுமையான ஊனத்தை ஏற்படுத்தும். இந்த நிலைமைகள் குறிப்பாக சிறார்களை பாதிக்கின்றன, கிட்டத்தட்ட 50% புதிய நோய்தாக்குதல்கள் குழந்தைகளில் ஏற்படுகின்றன, 35% இறப்புகள் 1 வயதிற்கு முன்பே ஏற்படுகின்றன.

"கௌச்சர் நோய் ஒரு குணப்படுத்தக்கூடிய அரிதான மரபணுக் கோளாறு ஆகும். ஆனால் சிகிச்சை மிகவும் விலை உயர்ந்தது. இந்த குழந்தைகளுக்கு சாத்தியமான எல்லா வழிகளிலும் உதவுவதற்கு மாநில மற்றும் மத்திய அரசுகள் தங்களைத் தாங்களே ஏற்றுக்கொண்டுள்ளன, ஆனால் சுமை மிகவும் அதிகமாக இருப்பதால், இந்த நோக்கத்திற்காக நாம் எந்த வகையிலும் பங்களித்து, இந்த குழந்தைகளுக்கு அர்த்தமுள்ள மற்றும் வெற்றிகரமான வாழ்க்கைக்கு உதவ வேண்டும், " என்று கரு பராமரிப்பு ஆராய்ச்சி அறக்கட்டளையின், மரபணு கோளாறுகள் ஆலோசகர் டாக்டர் சுஜாதா ஜெகதீஷ் கூறினார்.

லைசோசோமால் நொதியின் குறைபாடுள்ள அளவுகளால் ஏற்படுகிற கௌச்சர் நோய், மிகவும் பொதுவான லைசோசோமால் சேமிப்புக் கோளாறு ஆகும், இது உடலில் குளுக்கோசைல்செராமைடு குவிவதற்கு வழிவகுக்கிறது. இதன் விளைவாக செல் மற்றும் திசு செயலிழப்பு ஏற்படுகிறது, மற்றும் கல்லீரல் மற்றும் மண்ணீரல் வீக்கமாக வெளிப்படுகிறது. இருப்பினும், கௌச்சர் நோயின் மருத்துவ முறை நன்கு புரிந்து கொள்ளப்பட்டுள்ளது மேலும், நொதி மாற்று சிகிச்சை கிடைக்கிறது. கௌச்சர் நோய்க்கான சிகிச்சையின் செயல்திறன் (வகை 1) பொதுவாக ஹீமோகுளோபின் செறிவு, பிளேட்லெட் எண்ணிக்கை, மண்ணீரல் மற்றும் கல்லீரல் அளவு குறைப்பு மற்றும் எலும்பு நோயின் பண்புக்கூறுகள் ஆகியவற்றின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

பல பொது சுகாதார வழங்குநர்கள் பெரும்பாலும் நோய் கண்டறிதல், முன்கணிப்பு, அறிகுறிகளின் சிகிச்சை அல்லது ஆதரவு மற்றும் மரபணு நோய்கள் மற்றும் கோளாறுகளின் அறிகுறிகளைக் கொண்ட குழந்தைகளுக்கான உதவி ஆதாரங்கள் பற்றிய கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது.

"எல் எஸ் டி நோயாளிகளுக்கு வெவ்வேறு நாட்களைக் கடைப்பிடிக்கும் ஒவ்வொரு முறையும் நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பதை உணர்கிறோம். எந்தவொரு குழந்தையும் சிகிச்சையளிக்கக்கூடிய

நிலைமைகளால் பாதிக்கப்படக்கூடாது என்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும், மேலும் இந்த குழந்தைகளுக்கு உகந்த பராமரிப்பை வழங்குவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகளைக் கண்டறியும் பொறுப்பை நாம் அனைவரும் ஏற்க வேண்டும்." என்று லைசோசோமால் ஸ்டோரேஜ் டிஸார்டர்க்கான ஆதரவாளர் மற்றும் நடிகர் திரு . கார்த்தி சிவகுமார் கூறினார்

இந்த நிகழ்ச்சியில் ஃபெடல் கேர் ரிசர்ச் ஃபவுண்டேஷன் யின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் எஸ். சுரேஷ், ஃபெடல் கேர் ரிசர்ச் ஃபவுண்டேஷன் யின் மரபணு கோளாறுகள் ஆலோசகர் டாக்டர் சுஜாதா ஜெகதீஷ், லைசோசோமால் ஸ்டோரேஜ் டிஸார்டர் சப்போர்ட் சொசைட்டி யின் மாநில ஒருங்கிணைப்பாளர், திரு. கருணாகரன் லைசோசோமால் ஸ்டோரேஜ் டிஸார்டர் சப்போர்ட் சொசைட்டியின் மாநில ஒருங்கிணைப்பாளர், திரு. ராஜா, மற்றும் லைசோசோமால் ஸ்டோரேஜ் டிஸார்டர் இன் ஆதரவாளர் மற்றும் நடிகர் திரு. கார்த்தி சிவகுமார், ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

# பத்தே நிமிடத்தில் பாட்டு தயரானது வி.கே புரடக்ஷனின் மாவீரா படத்தின் இரண்டாவது பாடல்

## கவிப்பேரரசரின் புலமையும் ஜிவி பிரகாசின் அழகிசையும் காலமுள்ளவரை ஒலிக்கும்.

சென்னை, நவம்பர் 03 2022: வி.கே புரடக்ஷன் வழங்கும் #மாவீரா படத்தின் இரண்டாவது பாடலுக்கான பாடலும் மெட்டமைக்கும் பணியும் நடைபெற்றது.

கவிப்பேரரசரின் புலமையும் ஜிவி பிரகாசின் அழகிசையும் காலமுள்ளவரை ஒலிக்கும்.

பத்தே நிமிடத்தில் பாட்டு தயரானது.



பட்டாம்பூச்சிக்கு

பட்டுத்துணி போட்டது போல

சிட்டாஞ்சிட்டுக்கு சேலைக் கட்டி

விட்டது யாரு? சீனிக்கட்டியில செலை ஒன்னு

செஞ்சு வச்சது போல எட்டா ஒயரத்தில் எச்சி ஊற விட்டது யாரு?

வன்னித் தமிழா வாய்யா

உனக்கு வாச்சப் பொருளைத் தாயா பச்ச முத்தம் ஒன்னு கொடுத்தா பற்றிக் கொள்வேன் தீயா

அடி வஞ்சிக்கொடியே வாடி வளர்த்த பொருளத்தாடி

பாசத்த உள்ள வச்சுப்

பாசாங்க வெளிய வச்சு

வேசங்கட்டி வந்தவளே

வெறும்வாய மெல்லுறியே

மாவீரன் மண் காக்க

மானமுள்ள பெண் காக்க

அஞ்சாறுப் புலிக்குட்டி

அவசரமா வேணுமடி.

இன்னும் இன்னும் திகட்ட இப்படி நீள்கிறது பாடல்...

மாவீரா மாபெரும் வெற்றி

என்பதை இரண்டாவது பாடலும் உறுதிபடுத்தியது.

பேராளுமைகள் இருவருக்கும்

நெகிழ்ந்த நன்றிகள்.

- வ. கௌதமன்

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

வியாழக்கிழமை,
நவம்பர் 03, 2022

# தொற்றுநோயின் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, ஹிந்துஜாக்கள் , அவர்களின் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்ட தீபாவளி வரவேற்பு நிகழ்ச்சியை, லண்டனில் நடத்தினார்கள்

மும்பை, நவம்பர் 03 2022: லண்டனின் கீர்த்திபெற்ற சமூகக் கால நிகழ்வின் பிரதான அம்சமாக மாறியுள்ளதும் மற்றும் தொடர்ச்சியான முந்தைய பிரதமர்கள் கலந்துகொண்டதுமான இந்துஜா தீபாவளி வரவேற்பு,தொற்றுநோய் காரணமாக மூன்று ஆண்டுகளாக இடைவெளி விட வேண்டிய கட்டாயத்திற்குப் பிறகு நேற்று, அதன் அனைத்து ஆடம்பரத்திலும் மாட்சியிலும் நடத்தப்பட்டது. அழைப்பிதழ்கள் ஏற்கனவே முன்கூட்டியே சென்றிருந்த நிலையில், இங்கிலாந்தில் அரசியல் நிகழ்வுகளின் திருப்பம், இந்த கண்ணியமான நிகழ்வுக்கு ஒரு சாதகமான மறுதொடக்கத்தை அளித்தது.

தீபாவளிக்கு சில நாட்களுக்கு முன்பு, ரிஷி சுனக் இங்கிலாந்தின் முதல் பிரிட்டிஷ் ஆசிய இந்து பிரதமரானார். லண்டன் ஹெரிடேஜ் ஹோம் கார்ல்டன் ஹவுஸ் மேல் தளத்தில் தீபாவளி வரவேற்புக்கு சகாக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தூதர்கள் மற்றும் உயர் அதிகாரிகள், உயர்மட்ட வணிகத் தலைவர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் உட்பட 300 விருந்தினர்களை வரவேற்பதில் இந்துஜா குடும்பம் மகிழ்ச்சியடைந்தது. கோவிட் 19 தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து இந்த குடும்பத்தின், முதல்-நேரடி தீபாவளி கொண்டாட்டம் இதுவாகும்.

மாட்சிமைமிக்க மன்னர் மூன்றாம் சார்லஸின் முதன்மைச் செயலாளரான சர் கிளைவ் ஆல்டர்டன், அனைத்து சமயங்கள் மற்றும் சமூகங்களுக்கு சார்லஸின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டி, புதிய மன்னரிடமிருந்து சிறப்பு தீபாவளி வாழ்த்துக்களை வழங்குவதுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின.

விருந்தினர்களை வரவேற்று, ஹிந்துஜா குழுமத்தின் இணைத் தலைவர் கோபிசந்த் ஹிந்துஜா, அவரது சகோதரர்கள் பிரகாஷ் மற்றும் அசோக் ஹிந்துஜா ஆகியோர் தீபாவளியின் முக்கியத்துவத்தைப் பற்றியும், லட்சுமி தேவியைப் பற்றியும், உண்மையான செல்வம் என்பது எப்படி ஆசீர்வாதங்கள் மற்றும் கொடுப்பதன் மூலம் பெறப்பட்ட மனநிறைவை உள்ளடக்கியது என்பதையும் எடுத்துரைத்தார். ஜிபி ஹிந்துஜா, தனது மூத்த சகோதரர் எஸ்பி ஹிந்துஜா உடல்நலக்குறைவு காரணமாக வரவேற்பில் சேர முடியாததால் அவர் பங்குபெறமுடியவில்லை என்று அன்புடன் குறிப்பிட்டார்.

புதிய கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர், மக்களவை உறுப்பினர் நாதிம் ஜஹாவி, கோவிட் 19 தொற்றுநோய்களின் போது இருந்த முன்னாள் சுகாதார செயலாளர், மக்களவை உறுப்பினர் மாட் ஹான்காக், வெளியுறவுத்துறை அமைச்சர் லார்ட் அஹ்மத் ஆஃப் விம்பிள்டன் மற்றும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட லண்டன் மேயர் சாதிக் கான் ஆகியோர் கொண்டாட்டத்தில் இணைந்த, கன்சர்வேடிவ், தொழிலாளர் மற்றும் லிபரல் டெமாக்ராட் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆவார்கள். இந்த தீபாவளி கொண்டாட்டத்திற்கு மதங்கள், சமூகங்கள் மற்றும் அரசியல் வரம்பு முழுவதிலும் இருந்து ஏராளமான மக்களை ஒன்றிணைத்த இந்துஜா குடும்பத்திற்கு அவர்கள் அனைவரும் நன்றி தெரிவித்தனர். திருமதி கமல் பிரகாஷ் ஹிந்துஜா மற்றும் திருமதி ஹர்ஷா அசோக் ஹிந்துஜா ஆகியோர் லட்சுமி தேவியின் திருவுருவங்களை பிரமுகர்களுக்கு வழங்கினர்.

அர்ஜுன் ராம்பால், அவரது பங்குதாரரான கேப்ரியல்லா மற்றும் பின்னணி பாடகி கனிகா கபூர் ஆகியோர் பாலிவுட்டில் இருந்து வந்திருந்தார்கள். ஹிந்துஜா குழுமம் நேரடியாக இருப்பில் இருக்கும் 38 நாடுகளைச் சேர்ந்த 22 உயர் ஆணையர்களுடன், பயணத்திலிருந்த, ஆர்செலரின் எல்என் மிட்டலின் மனைவி திருமதி உஷா மிட்டலும் கலந்து கொண்டார்.

புதிய பிரதமரின் வெற்றிக்காக லக்ஷ்மி தேவி மற்றும் கணேஷை வேண்டி, ரிஷி சுனக், கோபிசந்த் ஹிந்துஜா, மேயர் சாதிக் கான் மற்றும் லார்ட் தாரிக் அகமது ஆகியோர் ஹிந்துஜா குடும்பத்தால் தற்செயலாக நிதியுதவி செய்யப்பட்ட புகழ்பெற்ற இந்தி திரைப்படமான 'அமர் அக்பர் அந்தோணி' பற்றிய குறிப்பை ஈர்த்து, இன்று இங்கிலாந்தில் ஒரு கிறிஸ்தவ மன்னர், ஒரு இந்து பிரதமர் மற்றும் லண்டனின் ஒரு முஸ்லீம் மேயர் உடன் பன்முகத்தன்மையின் செழுமையை வலியுறுத்தினர்.

லண்டனில் உள்ள அரை மில்லியன் வலிமையான இந்து சமூகத்தைப் பாராட்டிய மேயர் சாதிக் கான், "லண்டன் உலகின் மிகப் பெரிய நகரம் ஆகும் இந்து சமயத்தின் லண்டன்வாசிகள் செய்த மகத்தான பங்களிப்பும் ஒரு காரணமாக இருக்கிறது " என்று கூறினார்.

தீபாவளி பாரம்பரியம் மற்றும் இந்துஜா குடும்ப நெறிமுறைகளுக்கு ஏற்ப, விருந்தினர்களுக்கு விருப்பமான சைவ இந்திய உணவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மெனு வழங்கப்பட்டது.

# பிரான்ஸ் அரசின் உயரிய கௌரவமான செவாலியர் விருதுக்கு பிரபல இசைக் கலைஞர் அருணா சாய்ராம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்



சென்னை, நவம்பர் 03 2022: கர்நாடக இசைப் பாடகர், இசையமைப்பாளர் மற்றும் பேச்சாளரான அருணா சாய்ராம், பிரான்ஸ் அரசின் உயரிய கௌரவமான செவாலியர் விருதிற்கு தேர்வாகியுள்ளார்.

தனது பாடும் திறமைக்காக மட்டுமல்லாமல், இந்திய-பிரான்ஸ் உறவின் வளர்ச்சிக்காக அருணா சாய்ராம் ஆற்றிய பங்களிப்பிற்காகவும் இந்த விருதுக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

செவாலியர் விருதிற்கு அருணா சாய்ராம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது குறித்து பிரான்ஸ் குடியரசின் கலாச்சார அமைச்சர் ரீமா அப்துல் மலாக் அறிவித்துள்ளதாக சென்னையில் உள்ள பிரான்ஸ் தூதர் லிஸ் டால்போட் பாரே கூறினார். "இந்த விருது பிரெஞ்சு மற்றும் சர்வதேச கலை உலகிற்கு உங்களின் ஏராளமான பங்களிப்புகளுக்கு எங்கள் நாட்டின் பாராட்டுக்கான அடையாளமாகும்", என்று லிஸ் கூறினார். "கர்நாடக இசையின் அற்புதமான அழகையும் நுணுக்கத்தையும் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவிலும் உலகம் முழுவதிலும் பரப்பியுள்ளீர்கள். இந்த விருது பிரான்ஸ் நாட்டின் மீது நீங்கள் எப்போதும் கொண்டுள்ள நட்பை குறிக்கிறது. உங்கள் செயல்பாடு மற்றும் உங்கள் படைப்புகள் மூலம் கர்நாடக இசை உலகில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளீர்கள். பிரெஞ்சு கலைஞர்களுடனான உங்களின் பல கூட்டு நிகழ்ச்சிகள் மற்றும் பிரான்சில் அடிக்கடி நிகழ்த்தப்படும் நிகழ்ச்சிகள் மூலம், பிரான்ஸ் மற்றும் இந்தியாவை நெருக்கமாக கொண்டு வரவும், இரு நாடுகளுக்கு இடையே கலாச்சார மற்றும் கலை ஒத்துழைப்பை மேம்படுத்தவும் நீங்கள் பெரிதும் பங்களித்துள்ளீர்கள்", என்று அவர் மேலும் கூறினார்.

இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டது குறித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்திய அருணா சாய்ராம் கூறுகையில், "ஒரு இசைக்கலைஞராகவும், நமது நாட்டின் கலாச்சார வாரிசாகவும் எனது கடமையை செய்ததற்காக இதுபோன்ற ஒரு உயரிய விருதை பெற்றதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், நான் செய்து வரும் பணியை தொடர்ந்து மேற்கொண்டு அடுத்த கட்டத்திற்கு செல்வதற்கான கூடுதல் பொறுப்பையும் இது வழங்குகிறது. பிரான்ஸ் அரசாங்கத்திற்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்," என்றார். அருணா சாய்ராம் தனது தாயார் ராஜலட்சுமி சேதுராமனிடம் பயிற்சியைத் தொடங்கினார். பின்னர் அவர் புகழ்பெற்ற பாடகர் சங்கீதா கலாநிதி டி. பிருந்தாவின் சீடரானார், இதன் மூலம் 8 தலைமுறைகளுக்கும் மேலாக தஞ்சை பாரம்பரியத்தின் புகழ்பெற்ற பெண் பாடகர்களின் வரிசையைத் தொடர்ந்தார். பின்னர், அவர் நம் நாட்டின் பல முன்னணி வித்வான்களிடம் பயின்றார்.

தேசிய மற்றும் சர்வதேச இசைக்கலைஞர்களுடன் அவர் பணியாற்றியதன் மூலம் மெல்லிசையை ஒரு மொழியாகப் பயன்படுத்தி எல்லைகள் கடந்து கொண்டு சென்றார்.

உலகம் முழுவதும் உள்ள மாணவர்களுக்கு தனது அறிவை பகிர்ந்துகொள்வதில் பெரும் பங்களிப்பை அளித்துள்ளார். இதற்காகவே நாதயோகம் அறக்கட்டளையை நிறுவினார்.

அருணா சாய்ராம் இந்திய அரசின் பத்மஸ்ரீ உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார். மியூசிக் அகாடெமி சார்பில் சங்கீத கலாநிதி விருதையும் பெற்றுள்ளார். சங்கீத நாடக அகாடமியின் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இது தவிர தமிழக அரசின் கலைமாமணி விருது மற்றும் மத்தியப் பிரதேசத்தின் காளிதாஸ் சம்மான் விருதும் பெற்றவர். அருணா சாய்ராம் அமெரிக்க காங்கிரஸின் " உயர் சிறப்பு விருதை" பெற்றுள்ளார். மேலும், நியூயார்க் நகரம் மற்றும் சான் டியாகோ நகரங்களில் மேயரிடம் இருந்து பாராட்டை பெற்றுள்ளார்.

# வெற்றிமாறனின் திரைப்பட கல்லூரியில் 2-வது பேட்ச் மாணவர் சேர்க்கை ஆரம்பம்



சென்னை, நவம்பர் 03 2022: தமிழ் சினிமாவில் கடந்த 20 வருடங்களில் எண்ணிக்கையில் குறைந்த அளவிலேயே படங்களை இயக்கி இருந்தாலும் அத்தனை படங்களையும் சர்வதேச தரத்துக்கு இணையாக கொடுத்திருப்பவர் இயக்குனர் வெற்றிமாறன். அதனாலேயே சினிமாவை நோக்கி இயக்குனர் கனவுடன் வரும் இளைஞர்கள் பலரும் வெற்றிமாறனை தங்களது முன் மாதிரியாக எடுத்துக்கொண்டு அவரது படங்கள் மூலம் சினிமாவின் இலக்கணங்களை கற்று வருகின்றனர்.

அதே சமயம் சினிமாவில் சாதிக்கும் ஆர்வம் இருந்தும் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக இலவச சினிமா பயிற்சி வகுப்புகளை அளிக்கும் விதமாக, இயக்குநர் வெற்றிமாறன் சர்வதேச திரைப்பட மற்றும் பண்பாட்டு நிறுவனத்தை கடந்த வருடம் தொடங்கினார்.

தமிழ்நாட்டிலிருந்து ஒரு மாவட்டத்திற்கு ஒன்று என்கிற கணக்கில், தமிழ் பேசும் 21 - 25 வயத்துக்கு உட்பட்ட, ஊடகமல்லாத ஏதேனும் பாடப்பிரிவுகளில் பட்டம் பெற்ற மாணவர்கள், இந்த பயிற்சி வகுப்புகளில் சேர்வதற்கு முன்னுரிமை தகுதி பெறுகிறார்கள்..

குறிப்பாக சமூக, பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்கள், ஒரு குடும்பத்தின் முதல் தலைமுறை பட்டதாரிகள் ஆகியோருக்கு இதில் கூடுதல் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

இவர்களுக்கு ஆரம்ப ஆய்வு, எழுதப்பட்ட சோதனை, கல்வி நேர்காணல், தொழில்முறை நேர்காணல் மற்றும் வீட்டு வருகை

என ஐந்து படிகளாக தேர்வு நடத்தப்பட்டு, அதில் தேர்வாகும் மாணவர்களுக்கு, அவர்களது பயிற்சி காலத்தில் 100% மானியங்களுடன் முழுமையான உணவு மற்றும் ,குடியிருப்பு வசதிகள் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் இந்த இன்ஸ்டிட்யூட்டின் 2-வது பேட்சுக்கான (2023) மாணவர் சேர்க்கை தற்போது துவங்கப்பட்டுள்ளது. இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் **https://iifcinstitute.com/admission/** என்கிற இணையதளத்தின் மூலமாக விண்ணப்பிக்கலாம்

# டெல்லி மருத்துவமனைகளில் ஐசியூ வார்டில் அனுமதிக்கப்படும் நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிப்பு



சென்னை, நவம்பர் 03 2022: டெல்லி மருத்துவமனைகளில் ஐசியூ வார்டில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

காற்று மாசுபாடு உச்சத்தில் இருப்பதால், டெல்லி மக்கள் பல வித நோய்களுக்கு ஆளாகின்றனர். இந்த மாசு நிறைந்த காற்றை சுவாசிப்பதால் பலர் சுவாச கோளாறு பிரச்சனையால் அவதிப்படுவதாக தெரிவிக்கிறது. மேலும் காற்று மாசுபாட்டால் டெல்லி மருத்துவமனைகளில் உள்ள அவசர சிகிச்சை பிரிவு (மிசிஹி) வார்டில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

பள்ளிகளை மூட வாய்ப்பு

இந்த காற்று மாசுபாட்டுக்கு முக்கிய காரணம், டெல்லி மற்றும் அதனை சுற்றியுள்ள அரியானா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் வேளாண் கழிவுகளை தீயிட்டு எரிப்பதால் தான் என்கின்றனர். மேலும் அண்மை ஆய்வறிக்கைபடி, காற்று மாசுபாடு அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 2 வது இடத்தில் உள்ளது. மேலும் இந்தியாவில் காற்று மாசுபாட்டில் டெல்லி முதலிடத்தில் இருந்து கொண்டு வருகிறது.

இந்நிலையில் செய்தியாளரிடம் பேசிய சுற்றுச்சூழல் துறை அமைச்ச,ர் டெல்லியில் காற்றின் தர குறியீடு 450ஐ தாண்டும் போது, மாணவர்களின் நலன் கருதி பள்ளிகள் மூடப்படும். இக்காற்று மாசுபாட்டால் குழந்தைகள் மற்றும் மாணவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டு கொண்டு வருகின்றனர். இதை கருத்தில் கொண்டு பள்ளிகள் மூடப்படும் என தெரிவித்துள்ளார். ஏற்கனவே கடந்த ஆண்டு காற்று மாசுபாட்டால் பள்ளிகள் மூடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# டுவிட்டரில் 50 சதவீத ஊழியர்கள் பணி நீக்கம்: எலான் மஸ்க் முடிவு



சென்னை, நவம்பர் 03 2022: பிரபல சமூக வலைதளமான டுவிட்டர் நிறுவனத்தை உலகின் நம்பர் ஒன் பணக்காரரர் எலான் மஸ்க் வாங்கி உள்ளார். அந்நிறுவனத்தை வாங்கிய உடனே பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

உயர் அதிகாரிகள் நீக்கம், நிர்வாகக்குழு கூண்டோடு கலைப்பு, டுவிட்டர் பயனாளர்களின் புளூ டிக்கிற்கு கட்டணம் ஆகிய நடவடிக்கைகளை எடுத்தார். மேலும் வரும் ஆண்டுகளில் டுவிட்டரில் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என்று எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே டுவிட்டரில் ஊழியர்களை குறைக்க எலான் மஸ்க் முடிவு செய்து அதற்கான நடவடிக்கை எடுக்கவும், பணிநீக்கம் செய்ய வேண்டிய ஊழியர்களின் பட்டியலை தயாரிக்குமாறு மேலாளர்களுக்கு உத்தரவிட்டு உள்ளதாகவும் தகவல்கள் வெளியானது.

இந்த நிலையில் டுவிட்டரில் 50 சதவீத ஊழியர்களை நீக்கம் செய்ய எலான் மஸ்க் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. செலவுகளை குறைக்க அவர் இந்த நடவடிக்கையை எடுத்து உள்ளதாக கூறப்படுகிறது.

பணி நீக்கம் செய்யப்படும் ஊழியர்களுக்கு 60 நாட்கள் மதிப்புள்ள பணி நீக்க ஊதியம் வழங்கப்படும். டுவிட்டரில் தற்போது 7,500 பேர் பணியாற்றி வருகிறார்கள். இதில் சுமார் 3,700 ஊழியர்களை நீக்கம் செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

# பெப்பர்ஃப்ரை, தனது புதிய ஸ்டுடியோவை தமிழ்நாட்டின் சென்னையில், தொடங்கியுள்ளது

## தென்னிந்தியாவில் அதன் சர்வதட இருப்பை பலப்படுத்துகிறது



சென்னை, நவம்பர் 03 2022: வீட்டு உபகரணங்கள் மற்றும் வீட்டு பொருட்கள் முன்னணி வர்த்தக நிறுவனமான பெப்பர்ஃப்ரை, சென்னை சேலையூரில் தனது முதல் ஸ்டுடியோவை தொடங்குவதாக அறிவித்தது. ஆஃப்லைன் விரிவாக்கமானது, முக்கிய சந்தைகளுக்குள் ஊடுருவி, இந்தியாவில் வீடு மற்றும் வாழும் இடத்தில் அதன் சர்வதட நுகர்வோர் ஈடுபாட்டை வலுப்படுத்தும் இந்த நிறுவனத்தின் நோக்கத்துடன், இணங்குகிறது. பெப்பர்ஃப்ரை இன் ஸ்டுடியோ தடம் தற்போது நாட்டில் 200 க்கும் அதிகமான ஸ்டுடியோக்களுடன் 90 க்கும் அதிகமான நகரங்களில் பரவியுள்ளது.

பெப்பர்ஃப்ரை ஸ்டுடியோஸ், இந்தியாவில் மரச்சாமான்கள் விற்பனை வாய்ப்பு வளத்தை மாற்றியுள்ளது. நிறுவனத்தின் சர்வதட மூலோபாயம் ஆனது, நாடு முழுவதும் திளிதிளி ஸ்டுடியோக்களை விரிவாக்குவதன் மூலம் இயக்கப்படுகிறது, மேலும் இது தற்போது 90 க்கும் மேற்பட்ட தனிப்பட்ட கூட்டாளர்களுடன் செயல்படுகிறது. வாடிசா இன்டீரியர்ஸ் பிரைவேட் லிமிடெட் உடன் இணைந்து தொடங்கப்பட்ட இந்த புதிய ஸ்டுடியோ, சென்னை சேலையூரில் உள்ள வேளச்சேரி சாலையில் 1520 சதுர அடி உள் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள ஒரு முக்கிய [illegible] சென்னையில் உள்ள இந்த ஸ்டுடியோ நோக்கம் கொண்டுள்ளது.

பெப்பர்ஃப்ரையின் ஃப்ரான்சைஸ்சிங் மற்றும் அலையன்சஸ் வணிகத் தலைவர் அம்ருதா குப்தா பேசுகையில், “வாடிசா இன்டீரியர்ஸ் பிரைவேட் லிமிடெட் உடன் இணைந்து எங்களின் புதிய ஸ்டுடியோவை சென்னையில் தொடங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பெப்பர்ஃப்ரை ஃப்ரான்சைஸ் ஐ சொந்தமாக்குவது, ஒரு தொழில்முனைவோர் வெற்றியாகும், மேலும் பெருநகரங்கள் மற்றும் அடுக்கு 1 நகரங்களின் பெரிய வாய்ப்பு பகுதிகளைத் தாண்டி நுகர்வோரை சென்றடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். வெற்றிகரமான [illegible] வழங்க நாங்கள் முயற்சி செய்கிறோம்." என்று கூறினார். தினேஷ் சி (ஃப்ரான்சைஸ் ஸ்டுடியோ இன் உரிமையாளர்), “இந்தியாவின் முன்னணி வீட்டு பொருள்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள் சந்தையான, பெப்பர்ஃப்ரை உடன் கூட்டாளியாக இருப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். பெப்பர்ஃப்ரை ஒரு உண்மையான வித்தியாசமான சர்வதட வணிகத்திற்கு முன்னோடியாக உள்ளது மற்றும் மிகப்பெரிய சர்வதட வீட்டு பொருட்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள் வணிகத்தை உருவாக்குவதில் அவர்களின் பயணத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்." என்று கூறினார்.

2017 இல் தொடங்கப்பட்ட, பெப்பர்ஃப்ரை உரிமையாளர் வணிக மாதிரியானது, ஆர்டர் நிறைவேற்றுதல் மற்றும் பெப்பர்ஃப்ரை மூலம் விற்பனைக்குப் பிந்தைய சேவை, ஸ்டுடியோ வடிவமைப்பில் ஆதரவு, துவக்கம் மற்றும் அமைவு, செயல்பாட்டு வழிகாட்டுதல், சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல்களை வழங்குகிறது. சுற்றுப்புற தேவை சுழற்சிகள் மற்றும் போக்குகள் பற்றி அறிந்த உள்ளூர் தொழில்முனைவோருடன் பெப்பர்ஃப்ரை கூட்டுசேர்ந்துள்ளது. பெப்பர்ஃப்ரை ஒவ்வொரு மாதமும் சுமார் 8 முதல் 9 உரிமையாளர்களை அறிமுகப்படுத்துகிறது.

பெப்பர்ஃப்ரை இன் ஆஃப்லைன் தடயத்தை விரிவுபடுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் பெப்பர்ஃப்ரை அக்சிலெரேடார் ப்ரோக்ராம் உருவாக்கப்பட்டது. 15 லட்சத்தில் தொடங்கும், ஃபிரான்சைஸ் பார்ட்னர்களுக்குத் தேவைப்படும் இந்த திட்டச்செலவுதான், இந்தத் திட்டத்தின் பெரிய வித்தியாசமாக இருக்கிறது. இந்த மாதிரியானது, 100% விலை சமசீர்மையை அடிப்படையாகக் கொண்டது மற்றும் பங்குதாரர் தயாரிப்பு சரக்குகளை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை, இது பரஸ்பர நன்மை பயக்கும் வணிக கூட்டாண்மையாக மாற்றுகிறது.

# ஏத்தர் எனர்ஜி தமிழகத்தில் அதன் தடத்தை வலுப்படுத்துகிறது; இரண்டு புதிய ரீடெய்ல் அவுட்லெட்டுகளை திறக்கிறது



சென்னை, நவம்பர் 03 2022: இந்தியாவின் முன்னணி மின்சார ஸ்கூட்டர் தயாரிப்பாளரான ஏத்தர் எனர்ஜி, இன்று சென்னை மற்றும் வேலூரில் இரண்டு புதிய விற்பனை நிலையங்களை திறந்து, அதன் சில்லறை விற்பனையில் முன்னிலையில் உள்ளது. இந்த நிறுவனம் தற்போது மாநிலத்தில் எட்டு அனுபவ மையங்களை (இசி) கொண்டுள்ளது, சென்னையில் மட்டும் நான்கு இசி க்கள் உள்ளன. மும்பைக்கு அடுத்தபடியாக அதிக இசி க்கள் உள்ள நகரமாக இது உள்ளது. நவம்பர் மாதம், ஏத்தர் தனது ஒன்பதாவது அனுபவ மையத்தை சேலத்தில் திறக்கிறது.

ஆண்டுக்கு ஆண்டு அபரிமிதமான வளர்ச்சியுடன் ஏத்தர் எனர்ஜி 2022 ஆம் ஆண்டில் (ஏப்ரல்-செப்டம்பர்) ஆன்-ரோடு ஏத்தர் ஸ்கூட்டர்களின் எண்ணிக்கையில் 121% அதிகரித்துள்ளது. தமிழ்நாடு மின்சார ஸ்கூட்டர்களுக்கான அதிக தேவையுள்ள சந்தையாக உருவெடுத்துள்ளது. ஏத்தர் காலாண்டுக்கு காலாண்டு 49% வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. இந்த நிறுவனம், வரம்பு கவலையை குறைக்க, சார்ஜிங் உள்கட்டமைப்பில் வியூகமாக முதலீடு செய்து வருகிறது. இதற்காக மாநிலம் முழுவதும் 83+ வேகமான சார்ஜிங் பாயிண்டுகளான ஏத்தர் கிரிட்ஸ் உள்ளன. மின்சார வாகனங்களுக்கு மன அழுத்தமில்லாமல் மாற, நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் மொத்தம் 15 அனுபவ மையங்கள் மற்றும் 150 ஃபாஸ்ட் சார்ஜிங் கிரிட்களை சேர்க்க ஏத்தர் எனர்ஜி திட்டமிட்டுள்ளது.

கிவ்ராஜ் குழுமத்துடன் இணைந்து இரண்டு புதிய அனுபவ மையங்கள் (ஏத்தர் ஸ்பேஸ்) திறக்கப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள விற்பனை நிலையம் அம்பத்தூரிலும், வேலூரில் உள்ள விற்பனை நிலையம் சென்னை-பெங்களூரு நெடுஞ்சாலையிலும் உள்ளது. ஏத்தர் ஸ்பேஸ் ஆனது முழுமையான சேவை மற்றும் உரிமையாளர்களுக்கான ஆதரவுடன் தனித்துவமான உரிமை அனுபவத்தை வழங்கும். அனுபவ மையத்திற்கு செல்வதற்கு முன்பு, நுகர்வோர் ஏத்தர் எனர்ஜியின் இணையதளத்தில் டெஸ்ட் ரைடு ஸ்லாட்டுகளையும் பதிவு செய்யலாம்.

நிகழ்ச்சியில் பேசிய ஏத்தர் எனர்ஜியின் தலைமை வணிக அதிகாரி ரவ்னீத் எஸ் பொகேலா கூறுகையில், "புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட ஜென் 3 அறிமுகம் மற்றும் நடந்து வரும் பண்டிகை காலத்தின் மூலம், எங்களின் ஃபிளாக்ஷிப் 450 சீரிஸ்களுக்கான தேவை அதிவேகமாக உயர்ந்துள்ளது. மேம்பட்ட அம்சங்கள் மற்றும் அபரிமிதமான மதிப்பை வழங்கும் அதே வேளையில், சிறந்த சவாரி அனுபவத்தை வழங்கும் மின்சார ஸ்கூட்டர்களை மேம்படுத்த நுகர்வோர் அதிகளவில் எதிர்பார்க்கின்றனர். இது மாநிலத்தில் ஏத்தர் ஸ்கூட்டர்களுக்கான தேவை அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. மேலும் உற்பத்தியை அதிகரிக்கவும், ஜென் 3க்கான தேவையை பூர்த்தி செய்யவும் எங்கள் சப்ளையர்களுடன் இணைந்து நாங்கள் தீவிரமாக பணியாற்றி வருகிறோம். தமிழகத்தில் காத்திருப்பு காலம் வெறும் 15 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் ஒரு பெரிய சந்தை பங்கை கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கையுடன் உள்ளோம். மேலும் அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய மாநிலத்திற்கு சில அற்புதமான திட்டங்களை வைத்துள்ளோம்."

கிவ்ராஜ் குழுமத்தின் இயக்குநர் திரு.சூர்ய பிரகாஷ் சோர்டியா கூறுகையில், “தமிழகத்தில் மின்சார வாகனங்களை ஏற்றுக்கொள்வதற்காக ஏத்தர் எனர்ஜியுடன் கூட்டு சேர்ந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஏத்தர் எனர்ஜி ஒரு நிலையான, உயர்தர மற்றும் நன்கு செயல்படும் மின்சார வாகனத்தை புதிதாக உருவாக்கியது. மேலும் துணையாக சார்ஜிங் உள்கட்டமைப்பையும் கொண்டுள்ளது. வாடிக்கையாளர்களிடம் இருந்து எங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. ஏத்தர் ஸ்பேஸ் திறக்கப்பட்டதன் மூலம், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தை வழங்க நாங்கள் முயற்சி செய்கிறோம்."

ஏத்தர் எனர்ஜி தமிழ்நாடு மாநிலத்துடன் நீண்ட வரலாற்றை கொண்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில், ஏத்தர் தனது முதல் அனுபவ மையத்தை சென்னையில் திறந்தது. மேலும் 2021 ஆம் ஆண்டில், இந்த பிராண்ட் தனது செயல்பாடுகளை ஓசூர் உற்பத்தி நிலையத்தில் தொடங்கியது. இது நாடு முழுவதும் உள்ள தேவைகளை பூர்த்தி செய்கிறது. அதிகரித்து வரும் தேவை மற்றும் தீவிரமான விரிவாக்க திட்டங்களுடன், ஏத்தர் தனது இரண்டாவது தொழிற்சாலை இடத்தை ஓசூரில் தொடங்கியுள்ளது. மேலும் ஆண்டுக்கு 400,000 யூனிட்களை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. நாட்டில் மின்சார வாகனங்களை பிரதான போக்குவரத்துக்காக மாற்றுவதில் ஏத்தரின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தும் முயற்சியிலும், தமிழ்நாட்டில் முதலீடு செய்வதில் பிராண்ட் கவனம் செலுத்தும் முயற்சியிலும், இந்தியாவின் மிகப்பெரிய பிராந்திய கிரிக்கெட் லீக்கின் 6வது பதிப்பான டிஎன்பிஎல் 2022 உடன் ஏத்தர் எனர்ஜி கூட்டு சேர்ந்தது.

சென்னை மற்றும் வேலூரில் ஃபேம் மிமி திருத்தத்திற்கு பிறகு புதிய ஏத்தர் 450எக்ஸ்க்கான எக்ஸ்-ஷோரூம் விலை ரூ.1,57,505 மற்றும் ஏத்தர் 450 பிளஸ் விலை ரூ.1,35,995 ஆகும்.

# மிண்டா கார்ப்பரேஷன், கொரியாவின் டேசங் எல்டெக் நிறுவனத்துடன் தொழில்நுட்ப உரிமம் மற்றும் உதவி ஒப்பந்தத்தை அறிவிக்கிறது

புதுதில்லி, நவம்பர் 03 2022: இந்திய வாகன சந்தையில் அடுத்த தலைமுறை அட்வான்ஸ்ட் டிரைவர் அசிஸ்டன்ஸ் சிஸ்டம் தீர்வுகளை கொண்டு வருவதற்கு, ஸ்பார்க் மிண்டா இன் முதன்மை நிறுவனமான மிண்டா கார்ப்பரேஷன் லிமிடெட் ("மிண்டா கார்ப்" அல்லது "கம்பெனி" என குறிப்பிடப்படுகிறது;), முன்னணி ஆட்டோமோட்டிவ் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனமான, கொரியா இன், டேசங் உடன் தொழில்நுட்ப ஒத்துழைப்பில் ஈடுபட்டுள்ளது. இரு நிறுவனங்களும் அக்டோபர் 28, 2022 அன்று தொழில்நுட்ப உரிமம் மற்றும் உதவி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இந்த கூட்டாண்மையானது, இந்திய சந்தைக்கு உள்ளூர்மயமாக்கப்பட்ட எ டி எ எஸ் தீர்வுகளை வழங்குவதன்

மூலம் ஸ்பார்க் மின்டாவை தொழில்நுட்ப திருப்பத்தில் முன்னிலைப்படுத்துகிறது. மின்டாவின் திறன்களில் புகுத்தப்படும் தொழில்நுட்பத்துடன் அடுத்த தலைமுறை எ டி எ எஸ் தீர்வுகள் வழங்குநராக மாறுவதற்கான நிறுவனத்தின் பார்வையுடன், இதுவும் ஒத்துப்போகிறது.

இந்த ஒத்துழைப்பை அறிவிக்கும்பொழுது, மிண்டா கார்ப்பரேஷன் நிர்வாக இயக்குனர் திரு. ஆகாஷ் மிண்டா, “எ டி எ எஸ் என்பது, அதன் செயல்படுத்துதலின் ஆரம்ப அறிகுறிகளுடன், ஏற்கனவே இந்திய சந்தையில் தெரியும் ஒரு முக்கியமான, எதிர்கால தொழில்நுட்பமாகும். முன்னணி கார் உற்பத்தியாளர்களின் தற்போதைய மதிப்பீடுகள், தன்னாட்சி வாகனம் ஓட்டுவது தொடர்பான எ டி எ எஸ் அம்சங்கள் அடுத்த சில ஆண்டுகளில் எங்கும் பரவும் என்று வெளிப்படுத்துகிறது. ஆட்டோமோட்டிவ் எலக்ட்ரானிக்ஸ் துறையில் நான்கு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவத்தை கொண்டு வரும் டேசங் எல்டெக் உடனான எங்கள் கூட்டாண்மையை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த டி எல் எ உடன், உள்ளூர் தீர்வுகளை வழங்கும் துறையில் முதல் முன்னோடிகளில் ஒருவராக மிண்டா கார்ப்பரேஷன் இருக்கும். ஸ்பார்க் மிண்டா மற்றும் டேசங் எல்டெக் ஆகிய இரண்டும் அதிநவீன, எதிர்கால தொழில்நுட்பத்துடன் சிறந்த தீர்வுகளை வழங்குவதாக நம்புகின்றன. எங்கள் கவனத்தை வலியுறுத்துவது, இந்த முற்போக்கான கூட்டாண்மை என்பது தொழில்நுட்பம் மற்றும் வாடிக்கையாளர் மையத்தன்மை ஆகிய இரண்டு முக்கியப் பகுதிகளின் வெற்றிகரமான ஒருங்கிணைப்பாகும்." என்று கூறினார்.

"முன்னணி ஒஈஎம்-களுடன் எங்களுடைய தற்போதைய உறவை வலுப்படுத்த, முழுமையான தீர்வு வழங்குநராக மாறுவது, அத்துடன் புதிய வாடிக்கையாளர் தளத்தை விரிவுபடுத்துவதன் மூலம், இந்த சேர்க்கை எங்களுக்கு உதவும்." என்று மேலும் அவர் கூறினார்.

டேசங் எல்டெக், வாகன மின்னணுவியல் துறையில் முக்கிய பங்களிப்பாளர்களில் ஒன்றாக இருக்கிறது மற்றும் உள் வாகன இன்ஃபோடெயின்மென்ட், எ டி எ எஸ், ஆடியோ, எ எம் பி, மானிட்டர் போன்றவற்றில் நிபுணத்துவம் பெற்றது. இது, கொரியா மற்றும் சீனாவில் உள்ள அதன் ஆர்&டி மையம் மற்றும் உற்பத்தி வசதிகளையும் கொண்டுள்ளது.

டி எல் எ பற்றி கருத்து தெரிவித்த டேசங் எல்டெக் இன், சி ஈ ஓ, திரு.வோன் ஜிஹீ யாங் கூறுகையில், "இந்திய ஆட்டோமொபைல் துறையானது மேம்பட்ட ஓட்டுநர் உதவி அமைப்புகளை பொருத்தமானதாகவும் அவசியமாகவும் மாற்றிக்கொண்டு, தன்னாட்சி வாகனங்கள் பரவலாக பயன்படுத்தப்பட மாறும் ஒரு சகாப்தத்தை நோக்கி சீராக முன்னேறி வருகிறது, இரு நிறுவனங்களின் பலத்தையும் ஒன்றாகக் கொண்டுவருவதற்கு இந்த கூட்டாண்மை ஒரு சிறந்த படி என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். ஸ்பார்க் மிண்டாவின் வலுவான இந்திய இருப்பு மற்றும் டேசங் தொழில்நுட்பம் ஆகியவை இந்திய ஆட்டோமொபைல் துறையை மாற்றியமைத்து ஒட்டுமொத்த ஓட்டுநர் அனுபவத்தையும் சிறந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் மாற்றும்." என்றார். கூட்டாண்மையின் ஒரு பகுதியாக, டேசங் எல்டெக், தயாரிப்பு வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் சரிபார்ப்பு ஆகியவற்றுடன் ஸ்பார்க் மிண்டாவை ஆதரிக்கும், மேலும் எ டி எ எஸ் அமைப்புகளுக்காக அமைக்கப்படும் செயல்முறை வடிவமைப்பு, சரிபார்ப்பு மற்றும் உற்பத்தி வரிசை அமைப்பில் முக்கிய பங்கு வகிக்கும்.

டாப்ஸ்டார் பிரஷாந்த் நடித்துவரும் அந்தகன் திரைப்படத்தை மிகுந்த பொருட்செலவில் ஏராளமான முன்னணி நடிகர்களுடன், தயாரித்து இயக்கி வருகிறார் நடிகரும், இயக்குனருமான தியாகராஜன். படம் முழுவதும் முடிந்த நிலையில் இறுதிகட்ட காட்சிக்காக “டோர்ரா புஜ்ஜி” என்ற பாடலை ராக்ஸ்டார் அனிருத் மற்றும் மக்கள் செல்வன் விஜயசேதுபதி இணைந்து பாடியுள்ளனர். இந்த பாடலுக்கு நடனம் அமைத்து இயக்க நடனபுயல் பிரபுதேவா இசைந்துள்ளார். பிரஷாந்த், அனிருத், சிம்ரன், பிரியா ஆனந்த் மற்றும் 50 நடன கலைஞர்கள் ஆடும் இந்த பாடல் காட்சிக்காக பிரம்மாண்டமான அரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த பாடல் காட்சி படமான உடனே அந்தகன் படத்தின் ஆடியோ ரிலீஸ் நடைபெற உள்ளது. அதை தொடர்ந்து மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ள அந்தகன் படத்தை கலைப்புலி ஷி தாணு அவர்கள் உலகமெங்கும் திரையிட திட்டமிட்டு வருகிறார்.

